# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். **180/2015**

ஆணை எண். **0003/2017**

நாள் : **02/01/2017**

திரு அல்லூர் சீனிவாசன்,
திருச்சி – 17. – மனுதாரா்

மாநகராட்சி ஆணையா்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
திருச்சி – – எதிர் மனுதாரா்

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, புத்தூா், எண்.3, அலுவலா் குடியிருப்பைச் சேர்ந்த பசும்பொன் மக்கள் முன்னேற்றக் கழக நிறுவனத் தலைவா் திரு அல்லூா் சீனிவாசன் அவா்களது 10.08.2015 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 14.08.2015 அன்று பெறப்பட்டு 180/2015 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை:

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, புத்தூா், எண்.3, அலுவலா் குடியிருப்பைச் சேர்ந்த பசும்பொன் மக்கள் முன்னேற்றக் கழக நிறுவனத் தலைவா் திரு அல்லூா் சீனிவாசன் அவா்கள் திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட கோ. அபிஷேகபுரம் மண்டலத்தில் 52–வது வாா்டு வரித் தண்டலராகப் பணியாற்றிய திரு சேதுராமன் அவா்கள், புத்தூா் ஆபிசா்ஸ் காலனியில் உள்ள ஜெனட் மருத்துவமனைக்கு வணிக வளாக மதிப்பீட்டில் சொத்துவரி விதிக்காமல், குடியிருப்பு மனையாக மதிப்பீடு செய்து குறைந்த அளவில் சொத்துவரி விதித்து மாநகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படுத்தியதாகவும் இதற்கு வருவாய் ஆய்வாளா் மணிவாசகம், உதவி வருவாய் அலுவலா் திருமதி அ. ரஷீதாபேகம் மற்றும் உதவி ஆணையா் திரு எம்.தயாநிதி ஆகியோா் உடந்தையாக இருந்துள்ளனா் எனத் தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்கக்கோரி முறையீடு செய்துள்ளாா்.

2. மனுதாரரின் முறையீடு குறித்து திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை கோரப்பட்டது. மாநகராட்சி ஆணையா் தனது 20.10.2015 நாளிட்ட கடித எண்.2501/ சி 3/2015–ல் மனுதாரா் திரு அல்லூா் சீனிவாசன் அவா்களின் புகாா் மனுவின் அடிப்படையில் மாநகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்பட்டதை ஆவணங்களின் அடிப்படையில் ஆய்வு செய்ய மாநகராட்சி அலுவலா்கள் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு வரிகுறைத்து நிர்ணயம் செய்தது கண்டறிந்து உறுதி செய்யப்பட்டது எனத் தெரிவித்துள்ளாா்.

3. மாநகராட்சி ஆணையரின் அறிக்கையினைத் தொடர்ந்து கூடுதல் விவரங்கள் சில கோரப்பட்டன. இது சம்பந்தமாக மாநகராட்சி ஆணையர் பதிலளிக்கையில், குறைத்து வரி மதிப்பீடு செய்யப்பட்ட கட்டிடங்களின் எண்ணிக்கை மூன்று எனவும், அக்கட்டிடங்களின் வரிவிதிப்பு எண்ணிக்கை பதினொன்று எனவும், 18.08.2016 நாளிட்ட தனது கடித எண்.2501/15 சி3ல் தெரிவித்திருந்தார். சொத்துவரி நிலுவைத் தொகை ரூ.5,00,619/– முழுமையாக வசூலிக்கப்பட்டு விட்டதாகவும் இதுபோன்ற முறைகேடுகள் வேறு எந்த வார்டுகளிலும் நிகழவில்லை என்று தெரிவித்துள்ளார். மேலும் வணிகப்பயன்பாட்டு கட்டிடங்களுக்கு, குடியிருப்புக் கட்டிடங்களுக்கான சொத்துவரியை நிர்ணயிக்க காரணமான அலுவலர்கள் / அதிகாரிகள் மீது 28.05.2015 நாளிட்ட குற்றச்சாட்டு குறிப்பாணை எண்.2501/ சி 3/2015–ல் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன. இந்நேர்வில் உதவி ஆணையர் திரு எம். தயாநிதி, உதவி வருவாய் அலுவலர் திருமதி அ. ரஷிதாபேகம், வருவாய் உதவியாளர்கள் திருவாளர்கள் பெ. மாணிக்கவாசகம் மற்றும் ஏ.எஸ். சேதுராமன் ஆகியோர் மீது மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகளில் குற்றச்சாட்டுகள் நிரூபணமானதில் தண்டனையாக அடுத்து வரும் ஊதிய உயர்வினை ஆறுமாத காலத்திற்குத் திரண்ட பயனின்றி நிறுத்திவைத்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவித்து ஒழுங்கு நடவடிக்கை ஆணை நகல்களையும் சமர்ப்பித்துள்ளார்.

4. முறையீட்டு மனுதாரர் திரு அல்லூர் சீனிவாசன் அவர்கள் புகார் செய்த பின்பே, குறைவான சொத்து வரி விதிக்கப்பட்ட கட்டிடங்கள் தல ஆய்வு செய்து கண்டறியப்பட்டுள்ளன. மனுதாரர் இம்முறைகேடுகளை உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவத்திற்கு முறையீடு செய்ததினால் ரூ.5,00,619/– மாநகராட்சி அடைந்த இழப்பு வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும், மாநகராட்சிக்கு நிதியிழப்பு தொடர்ந்து ஏற்பட்டிருக்கும். இம்முறைகேட்டினை மாநகராட்சி அதிகாரிகள் அவர்களாகவே கண்டறிந்து நடவடிக்கை எடுக்காதது மாநகராட்சிக்கு ஏற்பட்ட களங்கமென இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. இந்நேர்வில், பதினொரு எண்ணிக்கையிலான வரிவிதிப்பு எண்களுக்கு சொத்துவரி நிலுவைத் தொகை ரூ. 5,00,619/– எனக் கண்டறியப்பட்டுள்ளதாக 18.08.2016 நாளிட்ட கடித எண். 2501/2015/சி3–ல் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும், மேற்குறிப்பிட்ட தொகை முழுவதும் வசூலிக்கப்பட்டு விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், 57004348 முதல் 57004351 முடிய வரிவிதிப்பு எண்ணுள்ள கட்டிடங்கள் மற்றும் 60003530–31 வரிவிதிப்பு எண்ணுள்ள கட்டிடங்களுக்கு சொத்துவரி நிலுவைத் தொகையினை வசூலித்ததற்கான ஆதார ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே, மேற்குறிப்பிட்ட வரிவிதிப்பு எண்கள் உள்ள கட்டிடங்களுக்கு சொத்துவரி நிலுவைத் தொகை வசூலிக்கப்பட்டிருப்பின் அதற்கான ஆதார ஆவணங்களை சமர்ப்பிக்கும்படி ஆணையிடப்படுகிறது. நிலுவைத்தொகை வசூலிக்கப்படாமலிருப்பின், அத்தொகையை வசூலிப்பதற்கு உடன் நடவடிக்கை மேற்கொள்ளும்படியும் இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. இதுசம்பந்தப்பட்ட அறிக்கையினை 60 தினங்களுக்குள் சமர்ப்பிக்கும்படி அறிவுறுத்தப்படுகிறது.

2017 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 2- ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர். 4/1/2017

பெறுநர்

மாநகராட்சி ஆணையர்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
திருச்சி –

திரு அல்லூர் சீனிவாசன்,
எண்.3, ஆபிசர்ஸ் காலனி,
புத்தூர், திருச்சி – 17.